

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | செப்டம்பர் 20, 2018 | புரட்சி 17 | முழக்கம் 36 | விலை: ரூ.3.00


# செருப்புத் தூக்கும் மதவெறி!

சென்னை அண்ணா சாலையில் உள்ள பெரியார் சிலை மீது ஒரு ஆசாமி செருப்பு வீச, அருகே இருந்த விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் பிடித்து காவல்துறையிடம் ஒப்படைத்தனர். விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் உள்பட சிறுத்தைகள் கட்சியினர் சாலை மறியல் நடத்தி செருப்பு வீசிய நபரையும் அவரைத் தூண்டிவிட்ட எச்.ராஜாவையும் குண்டர் சட்டத்தில் கைது செய்ய வலியுறுத்தியுள்ளனர்.

தமிழக காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஈ.வெ.கி.எஸ்.இளங்கோவன் சென்னையில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு அளித்த பேட்டியில், ‘எச். ராஜாவின் தூண்டுதலினால் செருப்பு வீசிய ஆசாமியையும் ராஜாவையும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும்’ என்று வலியுறுத்தியுள்ளார். தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் சென்னையிலும் தாராபுரத்திலும் பெரியார் சிலையை அவமதித்த மதவெறிக் கும்பலை வன்மையாகக் கண்டித்து தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யக் கோரி அறிக்கை விடுத்துள்ளார். பல்வேறு கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு முழுதும் பல்லாயிரக்கணக்கில் விநாயகன் சிலைகளை போக்குவரத்துக்கு நெருக்கடிகளை உருவாக்கி சாலைகளில் வைத்து காவல்துறை விதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, மதத்தை அரசியலாக்கும் சில மதவெறி அமைப்புகள் ‘விழா’ கொண்டாடின. பகுத்தறிவாளர்களால் எந்த ஒரு சேதாரமும் இந்த சிலைகளுக்கு ஏற்படவில்லை. மதத்தை அரசியலாக்கி வன்முறையைத் தூண்டுவதை எதிர்த்தும் நீதிமன்றம் காவல்துறை விதித்த ஒழுங்குமுறைகளை சுட்டிக்காட்டியும்தான் ஈரோடு, சென்னையில் பெரியார் கைத்தடிகளை ஏந்தி திராவிடர் விடுதலைக் கழகத்தினர் அற வழியில் போராடி கைதானார்களே தவிர, விநாயகன் சிலைகளை அவமதிக்கும் செயல்களில் ஈடுபடவில்லை.

பெரியார் விநாயகன் சிலை உடைப்புப் போராட்டம் நடத்தியபோதுகூட காசு கொடுத்து கடையில் வாங்கிய விநாயகன் பொம்மைகளை உடைக்கச் சொன்னாரே தவிர, கோயிலிலிருந்து விநாயகன் சிலைகளை எடுத்து உடையுங்கள் என்று கூறவில்லை.

கடலூரில் பெரியார் மீது செருப்பு வீசப்பட்ட போது ஒரு செருப்பு அவர் மீது விழுந்தது. ரிக்ஷாவில் வந்த பெரியார் ரிக்ஷாவைத் திருப்பச் சொல்லி, மற்றொரு செருப்பைத் தேடி எடுத்து, ஒரு ஜோடியாக இருந்தால் பயன்படுமே என்றார். அதே இடத்தில் கடலூரில் பெரியாருக்கு சிலை எழுப்பி, சிலையின் பீடத்தில் ‘செருப்பொன்று போட்டால் சிலை ஒன்று முளைக்கும்’ என்று கவிஞர் கருணானந்தம் எழுதிய கவிதை செதுக்கப்பட்டது.

1971இல் சேலத்தில் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் பெரியார் தொண்டர்கள் இராமன் படத்தை செருப்பால் அடித்ததாகக் கூறி பார்ப்பனர்கள், பார்ப்பனிய சக்திகள், பெரியார் படத்தை செருப்பால் அடிப்பதாக செய்திகள் வந்தன. உடனே பெரியார், “நானே பாதி விலையில் எனது படத்தையும் செருப்பையும் அனுப்புகிறேன். தேவைப்படுவோர் எழுதுங்கள். எனது படத்தை செருப்பாலடிக்கும்போது அதன் வழியாக எனது ராமன் எதிர்ப்புப் பிரச்சாரம் மேலும் பரவும். எப்போதுமே எனது எதிரிகள் வழியாகத்தான் எனது கருத்துகள் பரவி வருகின்றன” என்று அறிக்கை விடுத்தார்.

இப்போதும் பெரியார் கருத்து மேலும் வீரியமாக மக்களிடம் பரவவும், மதவெறி எதிர்ப்பு உணர்ச்சியை முடுக்கி விடவுமே இந்த செருப்பு வீச்சுகள் பயன்படத் தொடங்கியிருக்கின்றன. மனநோயாளியாக மாறி நிற்கும் பார்ப்பன எச்.ராஜாவின் சாக்கடைப் பேச்சுகள், பெரியார் கொள்கைகளை மேலும் தீவிரமாக்கி, திராவிட இயக்க உணர்வுகளை இளைஞர்களிடம் கொதி நிலைக்குக் கொண்டு சென்று கொண்டிருக்கின்றன.

இராமன் வனவாசம் போனபோது அவனது ‘செருப்பு’ இந்த ‘தேசத்தை’யே ஆட்சி செய்ததாக இராமாயணத்தை எழுதி பரப்பி வருவது பார்ப்பனக் கூட்டம். ஆனால் மனிதன் காலில் செருப்புப் போட்டு நடப்பதையே குற்றமாக்கி தண்டனை வழங்கியது இந்து மதம் கட்டமைத்த ஜாதி வெறி. அந்த இழிவுகளைத் துடைப்பதற்கும் ஜாதியக் கொடுமைகளை ஒழிப்பதற்கும் காலம் முழுதும் போராடிய தலைவர் சிலை மீது இப்போதும் செருப்பு வீசும் ‘விபீடணர்கள்’ இருக்கிறார்கள்.

பெரியார் இயக்கத்தின் கூட்டங்கள் நடக்கும் பகுதியிலேயே மேளதாளங்களுடன் சாமி ஊர்வலம் வந்தால் மேடைப் பேச்சை நிறுத்தி சாமி ஊர்வலத்துக்கு வழிவிட்டு அது கடந்த பிறகு, பேச்சைத் தொடரும் பண்பாட்டைக் கட்டிக்காத்து வரும் இயக்கம் பெரியார் இயக்கம்.

பார்ப்பனியம் ஊட்டி வளர்த்து வரும் பண்பாடோ இதற்கு நேர் மாறானது. இது செருப்பை வீசும்; சிந்தனையாளர்களை துப்பாக்கியால் சுட்டுக் கொல்லும்; பசு மாட்டின் பெயரால் அப்பாவிகளை அடித்துக் கொல்லும்; கரசேவை என்று கூறி மசூதியை இடித்து நொறுக்கும். பார்ப்பனியம் கட்டமைத்த வேதப் பண்பாடே - வன்முறையை நியாயப்படுத்துவதுதானே ‘சம்பூக வதை’!

பார்ப்பன ராஜாக்களே!

பெரியார் சிலையை நோக்கி செருப்பைத் தூக்கிக் கொண்டு வரும் கோழைகளே!

இதையே தொடர்ந்து செய்யுங்கள்!

தமிழ்நாட்டில் நீங்கள் கேள்வி கேட்பாரற்ற அனாதையாக்கப்படும் காலத்தை விரைந்து உருவாக்குங்கள். உருவாக்கி வருகிறீர்கள்.

அதுதான் தமிழகத்துக்கு விடியலைக் கொண்டு வரும்! தமிழகம் இந்த சவாலை சந்திக்கத் தயார்! ●

# கழகச் சார்பில் பெரியார் சிலைகளுக்கு மாலை

**பேராவூரணி:** தந்தை பெரியாரின் 140ஆவது பிறந்தநாளை முன்னிட்டு பேராவூரணி ஆவணம் சாலை முகத்தில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்ட அமைப்பாளர் திருவேங்கடம், நகர அமைப்பாளர் கலைச்செல்வன், மார்க்சிஸ்ட் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சேதுபாவாசத்திரம் ஒன்றிய செயலாளர் வேலுச்சாமி, மாவட்ட குழு உறுப்பினர் கருப்பையா, மதிமுக பொறுப்பாளர்கள் குமார், கண்ணன், மணிவாசன், தேனி ஆல்பர்ட், தமிழக மக்கள் புரட்சி கழகப் பொறுப்பாளர்கள் பைங்கால் மதியழகன், வீரக்குடி ராஜா, சத்துணவு ஊழியர்கள் சங்க பொறுப்பாளர் முத்துராமன், அறநெறி மக்கள் கட்சி பொறுப்பாளர்கள் வனராணி, ஜேம்ஸ், முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர் கீ.ரே. பழனிவேல், மெய்ச்சுடர் நா.வெங்கடேசன், பேராசிரியர் ச.கணேஷ்குமார், திரைப்படப் பாடலாசிரியர் செங்கை நிலவன், பெரியார் அரும்புகள் அறிவுச் செல்வன், அரும்புச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




**திருச்செங்கோடு :** தந்தை பெரியாரின் 140 ஆவது பிறந்தநாளான 17.09.2018 காலை 9 மணிக்கு, திருச்செங்கோடு நகர திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக, திருச்செங்கோடு ஒன்றிய அமைப்பாளர் சதீஷ்குமார் தலைமையில், பெரியாரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

**சேலம் கிழக்கு :** சேலம் கிழக்கு மாவட்டம் சார்பில் தந்தை பெரியார் சிலைக்கு கிழக்கு மாவட்ட தலைவர் சக்திவேல் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது, இந் நிகழ்வில் மாவட்ட செயலாளர் டேவிட், மாவட்ட அமைப்பாளர் முத்து மாணிக்கம், மாநகர செயலாளர் பிரபு, இளம்பிள்ளை பகுதி செயலாளர் தங்கதுரை மற்றும் இளம்பிள்ளை சேலம் தோழர்கள் கலந்து கொண் டனர். பெத்தாம்பட்டி, முருங்கப்பட்டி, குள்ளனம் பட்டி, இரும்பாலை, கேஆர் தோப்பூர், தாரமங்கலம், சின்னப்பம்பட்டி, பூசாரிக்காடு, கரிக்கடை, இளம்பிள்ளை பகுதிகளில் கொடியேற்றப்பட்டது. பேரணியின்போது இரண்டு ஆயிரம் துண்டறிக்கைகள் விநியோகம் செய்யப்பட்டது.

**நங்கவள்ளி :** பெரியார் பிறந்தநாள் விழா நங்கவள்ளி மேச்சேரி ரோட்டில் உள்ள K.R.ஏஸ்பின்னிங்மில் தொழில் சங்கத்தில் உள்ள கொடிக்கம்பத்தில் ஜெயந்தி, நங்கவள்ளி பேருந்து நிலையத்தில் உள்ள கொடிக் கம்பத்தில் யசோதா , வீரக்கல்லில் உள்ள கொடிக் கம்பத்தில் இந்திராணி ஆகியோர் கொடியேற்றினர். கலந்து கொண்ட தோழர்கள் அன்பு, கிருஷ்ணன், ராஜேந்திரன், கண்ணன், சந்திர சேகர், மனோஜ், பன்னீர், உமாசங்கர்.

**செஞ்சி :** 140ஆ வதுபெரியார் பிறந்தநாள் விழா செஞ்சி கூட்டு சாலையில் திராவிடர் விடுதலை கழகம் சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் பெரியார் சாக்ரடீஸ் அனைவரையும் வரவேற்க பெரியார் படத்திற்கு ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஏ.கே.மணி, வி.சி.க. வெற்றிச்செல்வன், தி.க. அர்ச்சுணன், பழங்குடி ம.மு.சுடரொளி சுந்தரம், தி.மு.க. கர்ணன், அ.ம.க.சேகர், சி.பி.ஐ. செல்வராஜ், பெரியார் சிந்தனையாளர் பேரவை துரை திருநாவுக்கரசு. அரிமா சங்கம் அசோக், கவிஞர் செஞ்சி தமிழினியன், தர்மசிங், ஞானமணி மற்றும் பலர் மலர் தூவி வீரவணக்கம் செலுத்தினர். அரசு நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது.

**கோவை :** பெரியாரின் 140ஆவது பிறந்த தின விழா கோவையில் மிக எழுச்சியோடு நடைபெற்றது. கழகத்தின் சார்பில் காலை 10 மணிமுதல் நமது சார்பில் அச்சிடப்பட்ட ‘மக்களை மடையர்களாக்கும் மதவெறி ஆட்சி’ துண்டறிக்கை அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது. அதன் பின் காந்திபுரம் பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு ஜாதி மத ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது. விழா கோவையில் மிக எழுச்சியோடு நடைபெற்றது. நேருதாஸ் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் தோழர்கள் நிர்மல்குமார், சூலூர் பன்னீர்செல்வம், ஜெயந்த், வீரபாண்டி கணேஷ், லோகு, ஜெப்பிரிகான், உடுமலை இயல், சமையல் கணேஷ், சூலூர் பாபு, முனியப்பன், கிருத்திகா, ராஜா, மாதவன், இளங்கோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

**சென்னை :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்டம் சார்பாக 17.09.2018 காலை 8.30 மணிக்கு சிம்சன் பாலம் அருகில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி முழக்கங்கள் எழுப்பி வீரவணக்கத்தை செலுத்தினர்.

தொடர்ந்து, இருசக்கர வாகனத்தில் பேரணியாக தி.நகர் பேருந்து நிலையம், கலைஞர் கருணாநிதி நகர் பகுதி,

(4 ஆம் பக்கம்)

# அம்பேத்கர் மதமாற்றத்தை வரவேற்று அண்ணா எழுதியக் கட்டுரை

***அம்பேத்கர் இந்து மதத்துக்கு முழுக்குப் போட்டுவிட்டு 3 இலட்சம் மக்களுடன் புத்த மார்க்கம் தழுவியதை வரவேற்று அறிஞர் அண்ணா 'திராவிட நாடு' ஏட்டில் எழுதிய கட்டுரை.***

இந்து மதத்தைவிட்டு உளம் வெந்து கூட்டம் கூட்டமாக வெளியேறுகிற மக்களை, தனது அரவணைப்புக்குள் அன்புடன் தழுவிக் கொள்ளும் பணியினை, இப்போது புத்தநெறி ஆற்றி இருக்கிறது.

ஒரே இடத்தில், ஒரே நாளில், ஆடவரும் பெண்டிரும் சிறார்களுமாகச் சேர்ந்து மூன்று இலட்சம் மக்கள், ஒரு மதத்தைவிட்டு வேறொரு மதம் புகுந்த சம்பவம், அதிலும் இந்து மதத்தைவிட்டுப் புத்த மதம் தழுவிய செய்தி, இதுவரை வரலாற்றில் இடம்பெற்றிருக்கவில்லை. இம்மத மாற்றச் செய்தியைச் சித்தரித்துள்ள ஒரு நிருபர், "உலகில் வேறு எங்கும் நடைபெறாத இந்தச் சம்பவம் நடைபெற்றது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று இலட்சம் மக்கள் கூடியிருந்த காட்சியையும், அந்த இடத்தின் பரப்பையும், அதே நிருபர், "நகருக்கு வெளியே 10 இலட்சம் சதுர அடி விஸ்தீரணமுள்ள மைதானம் என்றும், மைதானம் முழுதும் ஒரே ஜனசமுத்திரமாகக் காணப்பட்டது" என்றும் வரைந்துள்ளார்.

இந்து மதத்தைவிட்டு வெளியேறும் திருப்பணி இன்று நேற்று ஏற்பட்டதன்று, இவ்வெளியேற்றம் தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறது.

இருந்தாலும், மூன்று இலட்சம் மக்கள் ஒரே நாளில் ஒரே இடத்தில் கூடி, இந்து மதத்திலிருந்து நீங்கிப் புத்த மதம் புகுந்திருப்பது, இந்து மதப் பாதுகாப்பாளர்களுக்குப் பேரதிர்ச்சி தரும் சம்பவமாகும். இதற்குமுன் மதம் மாறி இருப்பவர்கள், பொன்னாசைக்கும் பொருளாசைக்கும் பலியாகியும், அந்தஸ்துக்கும் அதிகாரத்துக்கும் அடிமையாகியும், மதம் மாறி இருப்பவர்களாகும் எனக் கூறுவது மிகைப்படக் கூறியதாகாது.

ஆனால், மூன்று இலட்சம் மக்களுடன் இன்று புத்த நெறியில் புகுந்துள்ள டாக்டர் அம்பேத்கரின் மதம் மாற்றச் செய்தி, அப்பட்டியலில் சேர்த்து எண்ணத்தக்கதன்று.

டாக்டர் அம்பேத்கர் இந்து மதத்தின் உள்ளடக்கத்தை நன்கு கற்றிருப்பவர்; அவர் கற்காத இந்துமதத் தொடர்புடைய வடமொழி வேதாகம நூல்கள் இல்லை என்றே சொல்லலாம்.

இந்திய அரசியல் சட்டங்களை உருவாக்கக்கூடிய அளவிற்கு சட்ட நூல் பயிற்சி பெற்றிருப்பவர்.

அத்தகைய ஒரு பேராசிரியர் இந்து மதத்தை உதறித் தள்ளிவிட்டு, மூன்று இலட்சம் மக்களுடன் புத்த நெறியை மேற்கொண்டார் என்பது சாதாரணமானவர்கள் இந்து மதத்தை வெறுத்து ஒதுக்கிவிட்ட சம்பவம்போல் கருதக்கூடியது அல்ல.

புத்தநெறி தழுவிய டாக்டர் அம்பேத்கர்,

"பிரம்மா, விஷ்ணு, மகேஷ், கபாலி, கணபதி மற்றும் இந்துமத தெய்வங்களைக் கடவுள்களாகக் கருத மாட்டேன். கடவுள் அவதாரத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. எந்த விதச் சடங்கிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. புத்தரை விஷ்ணு அவதாரமாக நம்பவில்லை, சடங்குகள் செய்விக்கப் பார்ப்பனர்களை அழைக்க மாட்டேன். தீண்டாமையை அனுஷ்டிக்க மாட்டேன். எல்லா மனிதர்களையும் சமமாகக் கருதுவேன். எல்லா மனிதர்களையும் சமமாகக் கருதுவேன். பஞ்சசீலக் கொள்கையை அனுஷ்டிப்பேன்."

என உறுதிமொழி எடுத்துக் கொண்டு இருக்கிறார்.

அந்த உறுதிமொழியே இந்து மதத்தின் உட்பொருளையும், புத்த நெறியின் கோட்பாடுகளையும் தெளிவுபடுத்துவதாக அமைந்திருக்கிறது.

இம்மதமாற்றச் சேதி, இந்துமதக் காப்பாளர்களிடம் என்றும்போல் சிந்தனையைத் தூண்டத் தவறிவிட்டது. வழக்கமாக அவர்களுக்கு ஏற்படுகிற எரிச்சல், இச்சேதி கேட்டு ஏற்பட்டு இருக்கிறது.

காங்கிரஸ் ஆளவந்தார்களும், இம்மதமாற்றத்தை வழக்கம்போல் நையாண்டி செய்வதிலும், இம்மத மாற்றத்தின் நடுநாயகமாக இருக்கும் டாக்டரைத் தூற்றுவதிலும் மனச்சாந்தி தேடிக்கொள்ள முன்வந்திருக்கின்றனர்.



இப்பெரும் வரலாற்றுச் சம்பவத்தை, மிகமிகச் சாதாரண சம்பவம்போல் நாட்டு மக்களுக்கு அறிவிக்கும் பாணியில் ஈடுபட்டுள்ளனர். இதனை, சிறிய சம்பவமெனக் காட்ட அவர்கள் எவ்வளவுதான் முயன்றபோதிலும், அவர்களுக்கு ஏமாற்றமே கிடைக்கும். அவர்கள் இயல்பு அது; அதை மாற்ற எவரால் முடியும்? சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்ள ஒப்புமா?

இவர்கள் வாயுரையைக் கேட்டா உலக மக்கள், இம்மதமாற்றத்திற்குத் தரப்பட வேண்டிய மதிப்பின் அளவைத் தீர்மானித்துக் கொள்ளப் போகிறார்கள்? ஒருக்காலுமில்லை.

டாக்டர் அம்பேத்கரின் மத மாற்றச் சம்பவம், உலக மக்களின் சிந்தனையைத் தூண்டத் தவறிவிடாது.

மூன்று இலட்சம் மக்களை உடனழைத்துக் கொண்டு டாக்டர் அம்பேத்கர் ஏன் இந்து மதத்தை விட்டு வெளியேறத் துணிந்தார் என்ற கேள்வியை, பல்வேறு நாடுகளிலுமுள்ள அறிஞர் பெருமக்கள் தங்களுக்குத் தாங்களே கேட்டுக்-கொள்ளத்தான் போகின்றனர்.

சட்டப்படி தீண்டாமை இந்தியத் துணைக் கண்டத்தில் ஒழிக்கப்பட்டுவிட்டது என்ற விதியைக் கொண்டுள்ள இந்திய அரசியல் சட்டம் அதற்குரிய விடையைத் தராது.

இந்தியத் துணைக் கண்டத்தில் மதமாற்றத்திற்காக வெளிநாட்டினர் ஒன்பது கோடி ரூபாயைச் செலவிடுகின்றனர் என நியோகியின் நியாயத்தை எடுத்துக்காட்டி காஞ்சி காமகோடி பீடத்தார் 'இந்து மதத்தை அழிக்க அந்நிய நாட்டினர் இவ்வளவு பெருந்தொகையைச் செலவிட்டுள்ளனரே!' எனப் பேசும் பேச்சு, மேற்குறிப்பிட்ட வினாவிற்குத் தக்க விடையாக அமைய முடியாது.

உலக அமைதிக்குப் பாடுபடுவதாகக் கூறிவரும் நேருவின் நாட்டில், ஒரே நாளில் மூன்று இலட்சம் பேர் இந்து மதத்தைத் துறக்கும் அளவிற்கு, இன்னமும் தீண்டாமையின் கொடுமை இருந்து வருகிறது என்றுதான், உலக மக்கள் முடிவு கட்டுவர். அந்தக் கருத்தை மாற்ற நேருவின் பஞ்சசீலப் பேச்சும், இந்திய அரசியல் சட்ட சமரசப் பூச்சும், தேசிய ஏடுகளின் தூற்றல் கணைகளும், பயனற்றவைகளாகும்.

இந்து மதத்தைவிட்டு மக்கள் ஏன் கூட்டம் கூட்டமாக இப்பொழுதும் வெளியேறி வருகிறார்கள் என்பதற்கான மூல காரணத்தைத் தேடிக் கண்டறிந்து, அதைக் களைந்தெறிய வேண்டிய கட்டாயம் காங்கிரஸ் ஆளவந்தார்களுக்குக் குறைவாக இருக்கலாம்; அப்பணி தங்கள் பொறுப்பு அல்ல என்றுகூட அவர்கள் கருதலாம்.

ஆனால், காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியாரின் நிலை அதுவாக இருக்க முடியாது.

தனது மதிப்புக்கும், வருவாய்க்கும் இந்து மதத்தை மட்டுமே நம்பி உயிர்வாழ்ந்து உயர்நிலையில் வீற்றிருப்பவராவர், சங்கராச்சாரியார்.

எப்பொழுதும்போல், சரிந்து வரும் தனது மதிப்பையும், குறைந்துவரும் தனது வருவாயையும், இருக்கும் நிலையைவாவது பாதுகாத்துக் கொள்ளும் போக்குடையதாகத்தான், சங்கராச்சாரியாரின் இப்பொழுதைய செய்தியும் அமைந்திருக்கின்றதே யல்லாது, இந்து மதத்தை மற்றவர்கள் விரும்பி ஏற்கும் வகையில் இல்லையானாலும், இருக்கிறவர்களாவது தாங்கள் இறக்கும்வரை அதிலேயே ஒட்டிக்கொண்டு இருக்கும் வகையில், அதைப் புனிதமுடையதாக ஆக்கும் விருப்புக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

**9 கோடி ரூபாய் வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டு இந்து மதத்திலிருப் போரைத் தங்கள் மதத்துக்கு மாற்றுவதற்குப் பயன்படுத்துகிறார்கள் என்று ஓலமிடும் சங்கராச்சாரியார், இதுவரை தாழ்த்தப்பட்ட மக்களை முன்னுக்குக் கொண்டுவர, கோடிக் கணக்கு இருக்கட்டும், எத்தனை இலட்சம் எத்தனை ஆயிரம் செலவிட்டிருக்கிறார்? புள்ளி விவரம் காட்ட முடியுமா என்று கேட்கிறோம்.**

அரேபியாவிலிருந்து இஸ்லாம் மார்க்கம்தான் இறக்குமதியாயிற்று, தவிர, இன்றுள்ள இஸ்லாமியர்கள் அனைவரும் அங்கிருந்து இங்கு வந்து குடியேறினவர்களன்று. என்றோ ஒரு நாள் இந்து மதத்திலிருந்தவர்கள்தான் இன்று முஸ்லிம்களாக இருப்பவர்கள் அனைவரும்.

அன்றொரு காலத்தில் நூற்றுக்கணக்கில் இருந்து வந்த முஸ்லிம்கள், இன்று ஒன்பதுகோடி என்ற கணக்கில் பெருகிவிட்டனர் என்பதற்குரிய நியாயமான காரணத்தை இந்துமதத்தில்தான் கண்டுபிடித்தாக வேண்டும்.

இதுபோலவே கிறித்துவ மதம் இங்கு ஏன் எப்படிப் பரவ முடிந்தது என்பதனை அம்பேத்கரின் மதமாற்றத்தை நையாண்டி செய்யும் போக்கினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மூன்று இலட்சம் மக்களுடன் டாக்டர் அம்பேத்கர் மட்டுமல்ல, வேறு பல இலட்சக் கணக்கானவர்களும் வெளியேறிச் செல்லும் நிலை இருக்கத்தான் செய்கிறது.

தீண்டாமை, பாராமை, நெருங்காமை, பிறப்பினால் உயர்வு தாழ்வு போன்ற மிக மிகக் கொடிய தொற்றுநோய்க் கிருமிகள் குடியேறியுள்ள மாளிகை, தங்கத்தால் ஆக்கப்பட்ட அரண்மனையாக இருந்தாலும், அங்கு டாக்டர் அம்பேத்கர் போன்றவர்கள் நீண்ட நாள் வாழ ஒப்பமாட்டார்கள்; வெளியேறித்தான் தீருவர்.

டாக்டர் அம்பேத்கரின் இந்த மதமாற்றம் நல்லறிவாளர்கள் அனைவருடைய பாராட்டுதலுக்கும் உரியதாகும்.

**– திராவிட நாடு 21.10.1956**

## ஈரோடு–சென்னையில் பெரியார் கைத்தடி ஊர்வலம்



**ஈரோட்டில் :** ஈரோட்டில் செப்.15 அன்று மாலை 5 மணியளவில் விநாயகன் சிலை அரசியல் ஊர்வலத்தில் நடக்கும் ஒழுங்கு மீறல்களைக் கண்டித்து காளை மாடு சிலை அருகிலிருந்து பெரியார் கைத்தடி ஊர்வலம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் புறப்பட்டது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தொடங்கி வைத்தார். கழகத் தோழர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, இரவு 8 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர். அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் உள்ளிட்ட 100 தோழர்கள் கைதானார்கள். ஆதித் தமிழர் பேரவை நாகராஜன், தமிழ்ப் புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன் மற்றும் அக்கட்சித் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னையில் :** மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும் விநாயகர் ஊர்வலத்தை எதிர்த்து பெரியார் கைத்தடி ஊர்வலம் தென்சென்னை மாவட்ட செயலாளர் இரா.உமாபதி தலைமையில் 16.09.2018 அன்று மாலை 4 மணிக்கு ஐஸ் அவுஸ் மசூதி அருகில் நடைபெற்றது. கழகப் பொறுப்பாளர்கள், கழகத் தோழர்கள் பெரியாரின் கைத்தடி, பெரியார் முகமூடி அணிந்து விநாயகர் ஊர்வலத்தில் மதவதத்தை திணிப்பதை கண்டித்தும், பிள்ளையார் சிலையில் இரசாயன பூச்சுகளை பயன்படுத்தி கடலில் கரைப்பதைக் கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பினர். ஊர்வலத்தில் பங்கேற்ற 72 தோழர்களும் கைது செய்யப்பட்டு ஆர்.எம். எஸ் மிசாப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள மண்டபத்தில் அடைக்கப்பட்டு பிறகு விடுதலை செய்யப்பட்டனர்.



## சென்னை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் உரை (2)

# கலைஞரின் தனித்துவமான நிர்வாகத் திறன்

***த**ம்மம் சிந்தனையாளர் பேரவை சார்பில் ‘கலைஞரின் பன்முக ஆளுமை’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் செப்.8, 2018 மாலை 5 மணியளவில் பெரியார் திடலில் உள்ள மணியம்மையார் அரங்கில் நடைபெற்றது.*

*விடுதலை இராசேந்திரன் உரையில் குறிப்பிட்ட தாவது: (சென்ற இதழ் தொடர்ச்சி)*

‘முன்னேறிய ஜாதியினருக்கு இடஒதுக்கீடுகள் வேண்டாமா?’ என்று சட்டமன்றத்தில் எதிர்க் கட்சிகள் கேட்ட போது, கலைஞர் இப்படி பதில் கூறினார். ‘அழுக்குத் துணிகளைத்தான் சலவைக்குப் போட வேண்டும். ஏற்கனவே சலவை செய்து அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் துணிகளை சலவைக்குப் போட வேண்டிய தேவையில்லை’’ என்றார்.

1971இல் கலைஞர் ஆட்சிக்கு வந்தவுடன், பெரியார் கோயில் கர்ப்பகிரகத்துக்குள் ‘சூத்திரர்கள்’ நுழைவதற்கு இருந்த தடையை எதிர்த்து, கர்ப்பக்கிரக நுழைவுப் போராட்டத்தை அறிவித்தார். போராட்ட வீரர்களின் பட்டியல் ‘விடுதலை’ ஏட்டில் வெளியிடப்பட்டு வந்தன. பெரியாரை சந்திக்க வந்த கலைஞர், ‘என்னுடைய ஆட்சி நடக்கும்போது, நீங்கள் போராடலாமா?’ என்று கேட்டார். “நான் எனது கடமையைச் செய்கிறேன்; நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள்; எங்களை தாராளமாக கைது செய்யுங்கள்’’ என்றார் பெரியார். கலைஞர் கலங்கி அழுதார். ‘என்னுடைய ஆட்சியில் உங்களைக் கைது செய்வதா?’ என்று கேட்டார். அதற்குப் பிறகுதான், “அனைவரும் கர்ப்பக்கிரகத்தில் நுழையும் போராட்டம் என்றால், பிரச்சினையைக் கிளப்புவார்கள்; அனைத்து ஜாதியினருக்கும் உரிய அர்ச்சகர் பயிற்சிஅளித்து அவர்களை அர்ச்சக ராக்கும் வகையில் இந்து அறநிலையத் துறை சட்டத்தில் திருத்தம் கெண்டு வந்து சட்டசபையில் நிறைவேற்றலாம்’’ என்ற யோசனையை கலைஞர் கூறினார். ‘எப்படியோ எனக்கு சூத்திர இழிவு ஒழிய வேண்டும்’ என்றார் பெரியார்.

சட்டமன்றத்தில் கலைஞரிடம் காங்கிரஸ் கட்சியினர் “கர்ப்பகிரகத்துக்குப் பாதுகாப்பு வேண்டாம் என்று இந்த ஆட்சி முடிவுக்கு வந்து விட்டதா?’’ என்று கேட்டார்கள். கலைஞர் அதற்கு இவ்வாறு பதில் அளித்தார். “கர்ப்பகிரகத்துக்கு பாதுகாப்பு வேண்டும்தான். ஆனால் அது வர்ணாஸ்ரமப் பாதுகாப்பாக இருக்கக் கூடாது’’ என்று பதிலளித்தார். ‘கோயிலையே வேண்டாம் என்று கூறுகிற பெரியார், கோயில் அர்ச்சகர் பற்றி ஏன் கவலைப்படுகிறார்’ என்று கேட்டபோது, பெரியார் அவருக்கே உரிய மொழியில் பதில் கூறினார். “நான் பக்தனாக இருக்க வேண்டும் என்பதற்காக கர்ப்பக்கிரக நுழைவு உரிமையைக் கேட்கவில்லை; சூத்திரனாக இருக்கக் கூடாது என்பதற்காகக் கேட்கிறேன்’’ என்றார் பெரியார்.

‘பராசக்தி’ படத்திலேயே கலைஞர் மனிதனை மனிதன் இழுக்கும் கைரிக்ஷாக்களை ஒழிக்க வேண்டும் என்ற கருத்துப்பட வசனம் எழுதினார். ஆட்சிக்கு வந்தவுடன் மனிதனை மனிதன் இழுக்கும் கை ரிக்ஷாக்களை ஒழித்தார். இடதுசாரி ஆட்சி நடத்திய மேற்கு வங்கத்திலேகூட மனிதனை மனிதன் இழுக்கும் கைரிக்ஷாக்கள் ஒழிக்கப்படாதபோது கலைஞர் இந்த புரட்சியை செய்தார். இது ஒரு மனிதனின் சுயமரியாதையைக் காப்பாற்றும் திட்டம். பிச்சைக்காரர்களை ஒழித்து, அவர்களுக்கு மறு வாழ்வு இல்லங்களை அமைத்தார். இதுவும் சுயமரியாதைத் திட்டம்தான்.

1971ஆம் ஆண்டு நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதியில் வாழும் மக்களுக்கு புதிய குடியிருப்புகளை அமைக்கும் ‘தமிழ்நாடு குடிசைப் பகுதிகள்’ (முன்னேற்றம் மற்றும் அகற்றும்) சட்டத்தை கலைஞர் கொண்டு வந்தார். இந்தத் திட்டத்தை குடிசைக்குப் பதிலாக நல்ல குடியிருப்புகள் என்ற கண்ணோட்டத்தில் மட்டும் பார்க்கக் கூடாது. குடிசைப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் பெரும்பாலா னோர் பட்டியல் இன ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மக்கள், கிராமங்களில் இப்போதும் இவர்கள் தனிக் குடியிருப்புகளில் ‘சேரி’களில்தான் வாழ்கிறார்கள். ஆனால் இந்த குடிசை மாற்று வாரியத் திட்டம், ஒடுக்கப்பட்ட மக்களை நகர்ப்புறங்களில் மேல்தட்டு மேல் ஜாதி மக்கள் வாழும் பகுதிகளுக்குள் கொண்டு வந்ததோடு அவர்களை அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழ வைத்தது என்ற சமூகப் பார்வையோடு இத்திட்டத்தைப் பார்த்தால் இதில் அடங்கியுள்ள சமூகப் புரட்சியை உணர முடியும்.

தென் மாவட்டங்களில் சாதி வெறியர்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது ஜாதி வெறித் தாக்கு தலையும் கலவரங்களையும் நடத்திய காலத்தில்தான் கலைஞர் சமத்துவபுரங்களை உருவாக்கி, அதற்குப் பெரியார் பெயர் சூட்டி அந்த சமத்துவபுரத்தில் தலித் பிரிவினர் உள்ளிட்ட அனைத்து ஜாதியினரையும் குடியமர்த்தி அவர்களுக்கான பொது வாழ்க்கையை உருவாக்கினார். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கற்பனையில்கூட இன்றைக்கும் இத்திட்டங்களை நினைத்துப் பார்க்க முடியாது.

கலைஞரின் நிழலாக இறுதி வரை இருந்த அவரது உதவியாளர் சண்முகநாதன் அளித்த ஒரு பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார் : “சமத்துவபுரம், அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் சட்டம், உள்ளாட்சிப் பணிகளிலும் அரசுப் பணிகளிலும் பெண்களுக்கு இடஒதுக்கீடு, (இடஒதுக்கீட்டில்) உள் ஒதுக்கீடு இதையெல்லாம் கொண்டு வந்த தருணங்களில் அவ்வளவு பெருமிதமாக இருந்தார். அந்த சந்தோஷத்தை நம்மளையும் தொத்திக்க வைப்பார்’’ என்று குறிப்பிடுகிறார்.

காங்கிரசிலிருந்து விலகி வி.பி.சிங் ‘ஜன்மோர்ச்சா’ என்ற அமைப்பைத் தொடங்கியபோது, இட ஒதுக்கீடு குறித்த அவரது பார்வை, அது பொருளாதார அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதாகவே இருந்தது. அதுவே ஜன்மோர்ச்சாவின் கொள்கைத் திட்டமாகவும் இருந்தது. பிறகு அந்தப் பார்வையில் வி.பி.சிங்கிடம் தலை கீழ் மாற்றம் உருவானது. கலைஞரோடு வி.பி.சிங்கிற்கு அரசியல் உறவு உருவான பிறகுதான் அவரது பார்வையில் மாற்றம் வந்தது. 1989இல் ‘தேசிய முன்னணி’ ஆட்சியின் பிரதமராக வந்து வி.பி.சிங் பிற்படுத்தப் பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டை அமுல்படுத்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க செயலுக்கு கலைஞர் பின்னாலிருந்து செயல்பட்டத்தைக் குறிப்பிட வேண்டும். பார்ப்பன மதவாத சக்திகள், வி.பி.சிங் ஆட்சியை வீழ்த்தியவுடன், அன்றைக்கு தமிழகத்தின் முதல்வராக இருந்த கலைஞர், வி.பி.சிங்கை தமிழகத்திற்கு அழைத்து வந்து தமிழகம் முழுதும் வி.பி.சிங்குக்கு ஆதரவாக இருந்த மக்கள் எழுச்சியைக் காட்டியபோது, வி.பி.சிங் மனம் குளிர்ந்தார். “இநதியாவின் தலைநகரம் டெல்லியாக இருக்கலாம்; ஆனால் சமூக நீதியின் தலைநகரம் சென்னை; இது பெரியாரின் நாடு’’ என்று தான் ஒவ்வொரு கூட்டத்திலும் வி.பி.சிங் தனது உரையைத் தொடங்குவார்.

**குடிசை மாற்று வாரியத் திட்டம், ஒடுக்கப்பட்ட மக்களை நகர்ப்புறங்களில் மேல்தட்டு மேல் ஜாதி மக்கள் வாழும் பகுதிகளுக்குள் கொண்டு வந்ததோடு அவர்களை அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழ வைத்தது**

ஒவ்வொரு ஊரிலும் விடிய விடிய வி.பி.சிங், கலைஞர் வருகைக்காக மக்கள் பல்லாயிரக்கணக்கில் காத்திருந்து, தங்கள் உணர்வுகளை வெளிப்படுத் தினார்கள். அப்போது அந்தப் பயணம் முழுதும் ‘விடுதலை’யின் சார்பில் நான் உடன் சென்று வி.பி.சிங் உரையை ‘விடுதலை’யில் முழுமையாக பதிவு செய்தேன். ‘காவிரி நடுவர் மன்றம்’ அப்போதுதான் அமைக்கப்பட்டது. அதுவும் வி.பி.சிங்கின் ஜனதா தளம் கட்சியின் ஆட்சி கருநாடக மாநிலத்தில் நடந்தபோது சொந்தக் கட்சி ஆட்சியின் எதிர்ப்பையும் மீறி கலைஞர் வேண்டுகோளை ஏற்று நடுவர் மன்றத்தை அமைத்தார் வி.பி.சிங். பிரதமரிலேயே கலைஞருக்கு நெருக்கமாக இருந்தது யார் என்ற கேள்வியை சண்முகநாதனிடம் கேட்ட தற்கு, “கலைஞர் இதயத்துக்கு நெருக்கமாக இருந்தவர் வி.பி.சிங். ஒரு இராஜ பரம்பரையில் பிறந்திருந்தும், சாதி ஒழிப்பிலேயும், சமூக நீதியிலேயும் அவர் காட்டின அக்கறைதான் இதுக்கான முக்கியக் காரணம். இரண்டு பேரும் அவ்வளவு நெருக்கமாக இருந்தாங்க’’ என்று கூறுகிறார்.

கலைஞரின் செயலாளராக இருந்த இராஜமாணிக்கம் அளித்த பேட்டியில், “பிற எல்லா பிரதமர்களையும் தாண்டி (கலைஞரிடம்) உணர்வு ரீதியான உறவில் இருந்தவர் வி.பி.சிங். அவர் ஒரு இராஜ பரம்பரையைச் சார்ந்தவராக இருந்தாலும் சமூகநீதிக் கொள்கையில், இடஒதுக்கீடு விவகாரத்தில் அவர் காட்டிய பிடிமானம், இருவர் மத்தியிலும் உணர்வுபூர்வமாக ஒரு நட்பை வளர்த்திருக்கிறது’’ என்று குறிப்பிடுகிறார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் 110 ஆண்டுகால வரலாற்றில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர்கூட நீதிபதியாக வரவில்லை என்று பெரியார் ஒரு கூட்டத்தில் குரல் எழுப்பினார். கலைஞர்தான் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த திரு. வரதராஜன் அவர்களை முதல் நீதிபதியாக்கினார். பிறகு அவர் உச்சநீதிமன்றம் வரைப் போகும் வாய்ப்பு கிடைத்தது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘தமிழ் இந்து’ வெளியிட்ட ‘தெற்கிலிருந்து ஒரு சூரியன்’ என்ற கலைஞர் மலரில் இந்த வரலாற்றுச் சாதனையை நினைவுக் கூர்ந்ததோடு 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு தேர்வாணையம் ‘குரூப் 1 சர்வீஸ்’ தேர்வில் அதுவரை அந்தப் பதவிக்கு வந்திடாத சலவைத் தொழிலாளர், சவரத் தொழிலாளர், குறவர், கல்லுடைக்கும் சமூகத்திலிருந்து தேடித் தேடி அப்பதவிகள் வழங்கப்பட்ட சமூக நீதிப் புரட்சியையும் அவர் நினைவு கூர்ந்துள்ளார். ‘விடுதலை’ நாளேட்டில் அப்போது இது தலைப்பு செய்தியானது.

அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் நிகழ்த்திய முப்பெரும் சாதனைகளில் ஒன்று - சுயமரியாதைத் திருமணத்துக்கு சட்ட வடிவம் தந்தது என்றால் அதன் நீட்சியாகக் கலைஞர் கொண்டு வந்த சட்டம், பெண்களுக்கான சொத்துரிமை சட்டம். இரண்டு சட்டங்களையும் மேலோட்டமான கண்ணோட் டத்தில் பார்க்காமல் ஆழ்ந்து நோக்கினால் அதில் அடங்கியுள்ள சமூகப் புரட்சி புரியும். 1955ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டப்படி, ஒரு திருமணம் சட்டப்படி செல்லத் தக்ககது என்றால், அந்தத் திருமணத்தில் இந்து மதச் சடங்குகள் கட்டாயம் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். மணமகன், மணமகளுக்கு தாலி கட்ட வேண்டும் என்பதும் அதில் ஒன்று. சடங்குகள் முறையாகப் பின்பற்றவில்லை. மண மக்களின் ‘அக்னி வலம்’ குறிப்பிட்ட எண்ணிக்கையில் நடத்தவில்லை என்ற காரணங்களால் பல வழக்குகளில் திருமணத்தை செல்லாது என்று அறிவித்ததும் உண்டு. 1968இல் அண்ணா கொண்டு வந்த சுயமரியாதை திருமணச் சட்டம், 1955 இந்து திருமணச் சட்டங்களிலே கொண்டு வந்த திருத்தம், சமயச் சடங்குகளிலிருந்து முழுமையாக திருமணத்தை விடுவித்தது என்பதாகும். தாலி கட்டாவிட்டாலும் திருமணம் செல்லத் தக்கது என்ற திருத்தம் கொண்டு வரப்பட்டது. இந்த மசோதா சட்டமாகும் முன்பு பெரியார் பார்வைக்கு அண்ணா மசோதாவை அனுப்பி வைத்தார். அதில் பெரியார் சுட்டிக்காட்டிய கருத்து, தாலியைக் கட்டாயமாக்க வேண்டாம் என்பதாகும். அதன்படியே சட்டம் திருத்தப்பட்டது. இன்று வரை இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இந்து சடங்குகளிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்ட ஒரு சட்டம் கிடையாது. இந்தியாவின் சட்ட அமைச்சராக அம்பேத்கர் இருந்தபோது அவர் கொண்டு வந்த ‘இந்து சீர்திருத்த மசோதாவை’ ஆர்.எஸ்.எஸ். கும்பலும், வைதீகப் பார்ப்பனர்களும் இராஜேந்திர பிரசாத் போன்ற பழமையில் ஊறிய குடியரசுத் தலைவர்களும் எதிர்த்து சட்டத்தை நிறைவேற்றாமல் தடுத்தனர். புரட்சியாளர் அம்பேத்கர் உருவ பொம்மையையும் டெல்லி முழுதும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் எரித்தார்கள். ஆனால் தமிழ்நாட்டில் சுயமரியாதையை நிலைநாட்டும் வேத வைதிகச் சடங்கு முறைகளை நீக்கி வைக்கும் திருமணத்துக்கு எதிர்ப்பே இல்லாமல் சட்ட வடிவம் தரப்பட்டது.

அதேபோல கலைஞர் 1989இல் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கி தமிழ்நாட்டில் கொண்டு வரப்பட்ட சட்டம், 1956 இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தம். இந்தச் சட்டம் பெற்றோரின் சுயசம்பாத்தியத்தில் பெண்களுக்கான சொத்துரிமையில் சமபங்கு அளிக்கப்பட்டிருந்தாலும், கூட்டுக் குடும்பச் சொத்துப் பிரச்சினைகளில் பெண்களுக்கான வாரிசு உரிமை மறுக்கப்பட்டிருந்தது. 1989இல் கலைஞர் முதல்வராக இருந்தபோது கூட்டுக் குடும்ப வழியாக வரும் சொத்திலும் பெண்களுக்கு பங்கு உண்டு என்று இந்து வாரிசு உரிமைச் சட்டத்தைத் திருத்தினார். தமிழ்நாட்டில் கலைஞர் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு, 15 ஆண்டுகளுக்குப் பிறகுதான் நடுவண் அரசு 2005இல் நடுவண் அரசே இந்து வாரிசு உரிமைச் சட்டத்தைத் திருத்தி இந்த பாகுபாட்டை நீக்க முன் வந்தது. (தொடரும்)

*ஈரோட்டில் நிகழ்ந்த பரப்புரைப் பயண குழுவினரின் கலந்துரையாடல் செய்தி அடுத்த இதழில்*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# செங்கோட்டையில் இசுலாமியர்கள் மீதான மதவெறி தாக்குதலுக்கு கழகம் கண்டனம்

செங்கோட்டையில் நடந்த வன்முறைக்கு கண்டனம் தெரிவித்தும் வன்முறையாளர்கள் மீது தக்க நடவடிக்கையும், இசுலாமிய மக்களுக்கு தக்க பாதுகாப்பும் வழங்க தமிழக அரசுக்கு வலியுறுத்தியும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்த அறிக்கை.

செங்கோட்டையில் கடந்த 13.09.2018 அன்று இந்து முன்னணி அமைப்பின் சார்பில் நடத்தப்பட்ட விநாயகர் ஊர்வலம் திட்டமிட்டு கலவரமாக ஆக்கப்பட்டுள்ளது. அந்த ஊர்வலத்தில் இந்து தீவிரவாதிகள் வன்முறையை உருவாக்கி இசுலாமிய மக்களின் வீடுகள்,வாகனங்கள் அடித்து உடைக்கப்பட்டு, கடைகள் சூறையாடப்பட்டு சிலரை தாக்கி அம்மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டிருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. அடுத்தநாளும் வன்முறை தொடர்ந்து அப்பகுதி ஒரு பதட்டமான பகுதியாக மாறியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் சங்கபரிவார அமைப்புகள் திட்டமிட்டே இப்பகுதியில் வன்முறையை தூண்டுவது காவல்துறையில் புகார்களாகவும், வழக்குகளாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.இந்த ஆண்டும் வன்முறை நிகழவிருக்கும் ஆபத்தை சுட்டிக் காட்டி தக்க பாதுகாப்பு வழங்க வேண்டும் என இசுலாமிய அமைப்புகள் முன்கூட்டியே காவல்துறை உயர் அதிகாரிகளிடம் முறையான புகார்களை பதிவு செய்தும் காவல் துறை தக்க நடவடிக்கைகளை எடுக்காமல், தங்கள் கடைமையை செய்யாமல் இருந்தது காவி பயங்கர வாதிகளின் வன்முறைக்கு வழி வகுத்ததாக அமைந்துவிட்டது.

காவல்துறையின் கண்முன்பே இசுலாமிய மக்கள் மீது நடத்தப்பட்டுள்ள இத்தாக்குதலை காவல்துறையினர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது கடும் அதிர்ச்சியாகவும் வேதனையாகவும் இருந்தது. இந்து மதவாதிகள் மிக சுதந்திரமாக தாக்குதல் நடத்தும் வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவலாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

தென்காசி சுற்றுப்பகுதிகளிலும் இசுலாமிய மக்களுக்கு எதிரான வன்முறை சூழலை அவர்கள் திட்டமிட்டு உருவாக்கிக் கொண்டே இருக்கின்றனர். இந்த திட்டமிட்ட வன்முறையை பயன் படுத்தி வாடகைக்கு வீடுகளில் குடியிருக்கும், வாடகைக்கு கடைகள் நடத்தும் இசுலாமிய மக்களை காலி செய்யசொல்லும் போக்கு அங்கு ஆரம்பித்திருக்கிறது என்பது சமூகநல்லிணக்கத்தை சிதைக்கும் மிக ஆபத்தான போக்காகும். இதனை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வேண்டிய கடமை அனைவருக்கும் இருக்கிறது.

கடந்த மாதம் பா.ஜ.க.வின் தேசிய செயலாளர் எச்.ராஜா செங்கோட்டையில் நடந்த பொதுக்கூட்டத்தில் வன்முறையை தூண்டும்படியும்,சமூக நல்லிணக்கத்தை குலைக்கும் வகையிலும், சிறுபான்மை மக்கள் மீது வெறுப்பை ஏற்படுத்தும் வகையிலும் பேசிச்சென்றுள்ளது கண்டிக்கத்தக்க ஒன்றாகும்.பாஜகவைச்சேர்ந்த கருப்பு முருகானந்தம் போன்றவர்கள் இப்பகுதியில் தொடர்ந்து பேசி வன்முறையை தூண்டிவிட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

பலலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்கும் இந்துமத திருவிழாக்கள் மதுரை கள்ளழகர் விழா,திருச்செந்தூர் சூரசம்ஹார விழா போன்றவை வன்முறை துளியும் இன்றி அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில் விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் சிறு எண்ணிக்கையிலான நபர்களைக் கொண்டு இந்து தீவிரவாத அமைப்புகளால் நடத்தப்படும் போது வன்முறை வெடிக்கிறது என்பதிலிருந்தே இது காவி பயங்கரவாதிகளின் திட்டமிட்ட வன்முறை என்பதை எளிமையாக அறிந்து கொள்ளமுடியும்.

விநாயகர் ஊர்வலம் எனும் பெயரில் நீதிமன்ற உத்தரவுகளை மதிக்காமல் திட்டமிட்டே தடை செய்யப்பட்ட பகுதிகளுக்குள் அத்துமீறி நுழைந்து கலவரத்தை உருவாக்கும் இந்துமதவாத வன்முறை கும்பல்களை தமிழக அரசு இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கி சமூக நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

வன்முறையில் ஈடுபட்ட காவி தீவிரவாதிகள் உடனடியாக அடையாளம் காணப்பட்டு அனைவரும் கைது செய்யப்பட்டு வன்முறையை தூண்டிவிடும் இந்து அமைப்புகளின் தலைவர்கள் மீதும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டால்தான் இவர்களின் திட்டமிட்ட வன்முறையை தடுக்க இயலும். இதில் தமிழக அரசு உடனடியக செயல்பட வேண்டும்.

இப்பகுதியின் காவல்துறையின் உயர் அதிகாரிகள் காவி பயங்கர வாதிகளின் இந்த தாக்குதலின் போது அமைதிகாத்த இசுலாமிய மக்களுக்கு பாராட்டுகளை தெரிவித்திருப்பதை வரவேற்கும் அதேவேளையில் பாதிக்கப்பட்ட இசுலாமிய மக்கள் சிலரின் மீதும் வழக்குகளை பதிவு செய்திருப்பது இந்துமதவாதிகளை திருப்திபடுத்தும் செயல் என்பதும் இது கண்டனத்திற்குரியதும் ஆகும்.

மேலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் இசுலாமிய மக்களின் பாதுகாப்பையும், அவர்களின் உடமைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதிலும் தமிழக அரசும் ,அதன் காவல்துறையும் தங்கள் கடமையைச் செய்ய வேண்டும் என திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

தமிழக அரசே, செங்கோட்டையில் இசுலாமிய மக்கள் மீது தாக்குதல் நடத்திய இந்துத்துவ வன்முறையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடு!

இசுலாமிய சிறுபான்மை மக்களுக்கு தக்க பாதுகாப்பு கொடு!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கிண்டி ஆலந்தூர் பகுதி, மந்தவெளி குடியிருப்பு மற்றும் இராயப்பேட்டை பெரியார் படிப்பகம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு கழகத் தோழர்கள் மாலை அணிவித்து முழக்கங்களை எழுப்பினர்.

இறுதியாக இராயப்பேட்டை பெரியார் சிலை அருகே கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தந்தை பெரியாரின் பிறந்தநாளில் கேக்வெட்டி, பெரியாரின் 140வது பிறந்தநாளில் நாம் முன்னெடுக்க வேண்டிய செயல்பாடுகள் குறித்து தோழர்கள் முன்பு சிறப்புரையாற்றினார்.

**திருப்பூர் :** பெரியார் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் பெரியார் பிறந்தநாள் விழா. பெரியார் உருவில் ஊர்வலம் 17.09.2018 அன்று திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் முன்பிருந்து துவங்கியது. பாசிச பாஜகவின் மதவெறி அரசியலை முறியடிக்க அணி திரண்ட திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம் மற்றும் தோழமை அமைப்புகளின் தோழர்கள் மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து ஒரு கி.மீ. ஊர்வலமாக சென்று பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

150க்கும் மேற்பட்ட தோழர்கள் பெரியார் உருவம் பொறித்த முகத்தினை கொண்டு தந்தை பெரியாரின் புகழ்பாடும் முழக்கங்களை எழுப்பினர். மேலும் பாசிச மதவெறி பாஜக அரசைக் கண்டித்து முழக்கம் எழுப்பி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

நிமிர்வு கலைக்குழுவின் பறையிசை முன்செல்ல பறையிசைக்கு ஏற்றவாறு தோழர்கள் சிலம்பம் சுழற்றி உடன் வந்தனர். பெரியார் இயக்க கூட்டமைப்பு சார்பில் பாதகை ஏந்தி கொடிகளை உயர்த்தி பிடித்து 150 பெரியார்கள் இரண்டிரண்டு பேராய் முழக்கம் எழுப்பி பெரியார் சிலைக்கு வந்தடைந்தனர்.

கழகத்தின் சார்பில் பொருளாளர் துரைசாமி பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார். முகில்ராசு, நீதிராசன் உட்பட கழகத்தின் மாவட்ட மற்றும் மாநகர நிர்வாகிகள் உடனிருந்தனர். பெரியார் பிறந்தநாளை முன்னிட்டு 24.09.2018 அன்று நடத்த பெரியார் சிலையில் இருந்து வாகன ஊர்வலமாய் கொடியேற்றும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகளை ஆரம்பிக்கப்பட்டது.

**இராசிபுரம் :** இராசிபுரம் நகர கழகத்தின் சார்பில் பெரியாரின் 140 ஆவது பிறந்தநாள் விழா இராசிபுரம் புதிய பேருந்து நிலையம் முன்பு, பெரியார் படத்துக்கு மாலை அணிவித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டு , பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

நிகழ்வில், மணிமாறன் (நகர செயலாளர் சிபிஐ) முன்னிலை வகிக்க, சுமதி மதிவதனி வரவேற்புரையாற்ற, ரா.பிடல்சேகுவேரா (நகர அமைப்பாளர்) தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக வி.பாலு (திமுக முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், ராசிபுரம் நகர வளர்ச்சி மன்றத் தலைவர்), வைகறைசெல்வன் (விசி. மாநில துணை செயலாளர் விவசாய அணி), து. பூபதி, (பொறுப்பாளர் வி.சி.க. இளஞ் சிறுத்தை எழுச்சி பாசறை) ம.சந்திரசேகர் (மா.து.செயலாளர் ஆதி தமிழர் பேரவை), கருப்பண்ணன் (நகர செயலாளர், ஆதி தமிழர் பேரவை), குப்புசாமி (பொதுச்செயலாளர் தந்தை பெரியார் தொழில் சங்கப் பேரவை), கேசவன் (தலைவர், சிஐடியூ மெய்யநூர் கிளை), நா.குபேர்தாஸ் (தலைவர், கோல்டன் நற்பணி மன்றம்), கீதாலட்சுமி (வழக்கறிஞர், திமுக), பாலகிருஷ்ணன் (பு.இ.முன்னணி), பூபதி (கோல்டன் நற்பணி மன்றம்), கோபால் வளவன் மற்றும் அரசினர் மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் கலந்து கொண்டனர். இறுதியாக திலீபன் நன்றியுரை கூறி நிறைவு செய்தார்.

## ‘மாவீரன் ராஜா’வே எங்கே பதுங்கினாய்?

காவல்துறை அதிகாரிகளை மிரட்டி இட்லர் பாணியில் பேசியதோடு, “உயர்நீதிமன்றம் என்ன மயிரா?” என்று வீர கர்ஜனை செய்த “மாவீரன்” ராஜா, இப்போது எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை.

உயர்நீதிமன்றமே தானாக முன்வந்து வழக்கு தொடர்ந்திருக்கிறது. திருமயம் காவல்துறை, பிணையில் வெளி வர முடியாத எட்டு பிரிவுகளில் வழக்கு தொடர்ந்து, “மாவீரன்” ராஜாவைப் பிடிக்க தனிப்படைகளை நியமித்திருக்கிறது. ‘அப்படி எல்லாம் நான் பேசவே இல்லை’ என்று பல்டி அடித்த பார்ப்பன ராஜா, இப்போது தனது அலைபேசியை மூடிவிட்டு தலைமறைவாகி விட்டாராம்.

‘முண்டா தட்டும் வீராதி வீரன்’ எங்கே பதுங்கியிருக்கிறார் என்று தெரியவில்லை. யாராவது கண்டுபிடித்தால் காவல்துறையிடம் ஒப்படைக்க முன்வர வேண்டும். காவல்துறை போலீஸ் மோப்ப நாயைப் பயன்படுத்தியாவது இந்த ‘சங்கியை’த் தேடிப் பிடித்துக் கைது செய்யவேண்டும் என்று தமிழகம் ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கிறது.

## மலேசியாவில் பெரியார் நூல்கள் வெளியீடு

மலேசியாவில் பெரியார் 140ஆவது பிறந்த நாள் விழா சிலாங்கூர் மாநிலம் முன்னாள் நகராண்மைக் கழகத்தில் செப்.17 அன்று கொண்டாடப்பட்டது. டாக்டர் சி. தர்மலிங்கம் (சிலாங்கூர் மலேசிய தி.க. தலைவர் - ம.தி.க.) வரவேற்புரையில் த. பரமசிவம் (தலைவர், ம.தி.க. சிலாங்கூர் மாநிலம்) தலைமையில், ம.தி.க. பொறுப்பாளர்கள் எம். காந்தராஜ், பெரு. அ. தமிழ்மணி (தமிழர் தன்மான இயக்கத் தலைவர்), குணராஜ் ஜார்ஜ் (சட்டமன்ற உறுப்பினர் செந்தோசா), கணபதி ராவ் (சட்டமன்ற உறுப்பினர், சிலாங்கூர்) ஆகியோர் உரை யாற்றினர். விழாவில் கே.எம். பாலசுப்பிரமணியம் எழுதிய ‘பெரியார் ஈ.வெ. இராமசாமி’ எனும் ஆங்கில நூலும், நாரா. நாச்சியப்பன் எழுதிய ‘பெரியார் வரலாறு’ நூலும் வெளியிடப்பட்டன. கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் சார்லஸ் சந்தியா கோ நூல்களை வெளியிட்டார். ‘தோழர் பெரியார்’ நாடகம் காணொளி வழியாக ஒளிபரப்பப்பட்டது. இதே இடத்தில் 2017 ஜூன் மாதம் விடுதலை இராசேந்திரன் அ. மார்க்ஸ் பேசிய கூட்டத்தில் பெரியார் எதிர்ப்பாளர்கள் கலவரம் செய்தது குறிப்பிடத்தக்கது.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
✆9841489896

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th September 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN